# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**புவியியல் மாதாந்தப் பரீட்சை – 2022 (ஜுலை)**

| பெயர் / சுட்டெண் :- ..................... | தரம் :- 7 | நேரம் :- 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

## பகுதி - I

01 இயற்கையின் அற்புத உருவாக்கமாக விளங்குவது

(1) புவிக்கோளம் (2) வளிக்கோளம் (3) கற்கோளம் (4) நீர்க்கோளம்

02 புவியின் மத்தியகோட்டு விட்டம், முனைவு விட்டம் என்பன **முறையே**

(1) 12714கி.மீ, 12757கி.மீ (2) 12757கி.மீ, 12714கி.மீ

(3) 12758கி.மீ, 12415கி.மீ (4) 12415கி.மீ, 12758கி.மீ

03 புவி மேற்பரப்பின் பரப்பளவு

(1) 500 மி.ச.கி.மீ (2) 505 மி.ச.கி.மீ (3) 510 மி.ச.கி.மீ (4) 515 மி.ச.கி.மீ

04 40077 கி.மீற்றர் என்னும் அளவினால் குறிப்பிடப்படுவது

(1) புவியின் கண்ட நிலப்பரப்பு (2) புவியின் மொத்த நிலத்திணிவு

(3) முனைவுச்சுற்றளவு (4) மத்தியகோட்டுச் சுற்றளவு

05 புவியினை இரு அரைக்கோளமாக பிரிக்கின்ற கற்பனைக் கோடாக அமைவது

(1) மத்தியகோடு (2) மகரக்கோடு

(3) கடகக்கோடு (4) கிறீன்வீச்கோடு

06 ஒரு இடத்தின் அமைவை குறிப்பாகவும், சரியாகவும் அடையாளம் காண எமக்கு உதவுபவை

(1) கண்டங்கள், சமுத்திரங்கள் (2) கடல்கள், தீவுகள்

(3) அகலக்கோடுகள், நெடுங்கோடுகள் (4) நாடுகள், கண்டங்கள்

07 உலகின் மிகச்சிறிய கண்டமாக அமையக்கூடியது

(1) ஐரோப்பா (2) அவுஸ்ரேலியா (3) அந்தாட்டிக்கா (4) ஆபிரிக்கா

08 உலகிக் மிகச்சிறிய சமுத்திரமாக அமையக்கூடியது

(1) பசுபிக் சமுத்திரம் (2) அந்தாட்டிக் சமுத்திரம்

(3) இந்து சமுத்திரம் (4) ஆட்டிக் சமுத்திரம்



kalvi.lk

09 கீறின்வீச்கோடு ஊடறுத்துச் செல்லும் கிறீன்வீச் நகரம் அமைந்துள்ள நாடு

(1) பிரித்தானியா (2) பிரான்ஸ் (3) ஐக்கிய அமெரிக்கா (4) இந்தியா

10 உலகில் வரையப்பட்டுள்ள மொத்த அகலக்கோடுகளின் எண்ணிக்கை

(1) 90 (2) 180 (3) 181 (4) 190

11 உலகில் வரையப்பட்டுள்ள மொத்த நெடுங்கோடுகளின் எண்ணிக்கை

(1) 180 (2) 280 (3) 360 (4) 361

12 புள்ளியாக அமையக்கூடிய அகலக்கோடுகள் முறையே

(1) வடதுருவம், தென்துருவம் (2) வடதுருவம், கடகக்கோடு

(3) தென்துருவம், மகரக்கோடு (4) கடகக்கோடு, மகரக்கோடு

13 இலங்கை அமைவுபெற்றுள்ள அகல, நெடுங்கோடுகள் **முறையே**

(1) வட அகலக்கோடுகள், கிழக்கு நெடுங்கோடுகள்

(2) தென் அகலக்கோடுகள், மேற்கு நெடுங்கோடுகள்

(3) வடஅகலக்கோடுகள், மேற்கு நெடுங்கோடுகள்

(4) தென் அகலக்கோடுகள், கிழக்கு நெடுங்கோடுகள்

14 மேற்கிற்கும், கிழக்கிற்கும் பொதுவாக வரையப்படும் கோடாக அமைவது

(1) கிறீன்வீச்கோடு (2) சர்வதேச திகதிக்கோடு (3) மத்தியகோடு (4) மகரக்கோடு

15 புவி தனது அச்சில் எத்தனை பாகை சரிந்துள்ளது

(1) $23^0$ (2) $21½^0$ (3) $22½^0$ (4) $23½^0$

- **16 – 20 வரையான வினாக்களுக்கு Aப்பகுதியில் உள்ள விடயங்களை Bப்பகுதியுடன் இணைக்குக.**

16

| (A) | (B) |
|---|---|
| 1. மகரக்கோடு | A. $23½^0$ வட அகலக்கோடு |
| 2. மத்தியகோடு | B. $0^0$ அகலக்கோடு |
| 3. கடகக்கோடு | C. $23½^0$ தென் அகலக்கோடு |

(1) ABC (2) CBA (3) CAB (4) BCA

17

| (A) | (B) |
|---|---|
| 1. ஆர்ஜென்ரீனா | A. ஆபிரிக்கா |
| 2. லிபியா | B. தென் அமெரிக்கா |
| 3. அரேபியா | C. ஆசியா |

(1) ABC (2) CBA (3) BAC (4) ACB



kalvi.lk

| | (A) | (B) |
|---|---|---|
| 18 | 1. கரீபியன் கடல் | A. பசுபிக் சமுத்திரம் |
| | 2. திமோர் கடல் | B. அத்திலாந்திக் சமுத்திரம் |
| | 3 மஞ்சள்கடல் | C. இந்து சமுத்திரம் |

(1) CBA (2) BAC (3) BCA (4) ABC

| | (A) | (B) |
|---|---|---|
| 19 | 1. கியூபா | A. அத்திலாந்திக் சமுத்திரம் |
| | 2. மடகாஸ்கர் | B. பசுபிக் சமுத்திரம் |
| | 3. பிலிப்பைன்ஸ் | C. இந்து சமுத்திரம் |

(1) ABC (2) CBA (3) BAC (4) ACB

| | (A) | (B) |
|---|---|---|
| 20 | 1. மிகப்பெரிய தீவு | A. ஆசியா |
| | 2. மிகப்பெரிய கண்டம் | B. கிறீன்லாந்து |
| | 3. மிகப்பெரிய சமுத்திரம் | C. பசுபிக் சமுத்திரம் |

(1) BAC (2) ABC (3) CBA (4) ACB

(20 X 2 = 40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

## பகுதி - II

- **முதலாம்** வினாவுக்கும் ஏனைய **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

01 (I) நாட்டின் உட்பகுதியில் அமைந்துள்ள கடல்கள் **இரண்டு** தருக.

(II) மகரக்கோடு ஊடறுத்துச் செல்லும் நாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(III) இந்து சமுத்திரத்தில் அமைவு பெற்றுள்ள தீவுகள் **இரண்டு** தருக.

(IV) வட அமெரிக்கக் கண்டத்தில் அமைந்துள்ள நாடுகள் **இரண்டு** தருக.

(V) புவியில் கற்பனையாக வரையப்பட்டுள்ள பிரதான வட அகலக்கோடுகள் **இரண்டை** எழுதுக.

(VI) நிலப்பரப்பு என்பதனுள் அமைவு பெற்றுள்ள விடயங்கள் **இரண்டு** தருக.

(6 X 2 = 12 புள்ளிகள்)



kalvi.lk

02 (I) புவியில் உயிரினங்கள் வாழ்வதற்குக் காணப்படும் சாதகமான சூழல்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) புவி முழுமையான கோளவடிவம் எனக் கூறமுடியாமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.

. (4 புள்ளிகள்)

(III) புவிச்சுழற்சி தொடர்பாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

A) வரைவிலக்கணம் B) எடுக்கும் நேர அளவு

C) விளைவுகள் (2 +1 + 2 = புள்ளிகள்)

03 (I) அகலக்கோடுகள் என்றால் என்ன? (3 புள்ளிகள்)

(II) சர்வதேச திகதிக்கோடு வளைகோடாக வரையப்படுவதற்கான காரணம் யாது?

. (4 புள்ளிகள்)

(III) புவிச்சுற்றுகை தொடர்பாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

A) வரைவிலக்கணம்

B) எடுக்கும் நேர அளவு

C) விளைவுகள் (3 +1 + 1 = புள்ளிகள்)

04 (I) நெடுங்கோடுகள் என்றால் என்ன? (3 புள்ளிகள்)

(II) பருமன் அடிப்படையில் முதல் **நான்கு** சமுத்திரங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) பருமன் அடிப்படையில் முதல் **ஐந்து** கண்டங்களைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

05 (I) உலகில் அமைவு பெற்றுள்ள தீவுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) தீவுகள், கடல்கள் என்பவற்றை சுருக்கமாக வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

(III) மத்தியகோடு ஊடறுத்துச் செல்லும் நாடுகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

06 (I) உலகில் அமைவுபெற்றுள்ள கடல்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) ஆசியக்கண்ட நாடுகள் **நான்கைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) பின்வருவன அமைந்துள்ள கண்டங்களைக் குறிப்பிடுக.

A) கரீபியன் தீவு B) பிரேசில் C) அரபிக்கடல் D) பிரான்ஸ் E) நோர்வே

(5 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே
கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**